## பொம்முவின் பதினாறு இறகுகள்

*1.*
*அந்தரத்தில் விதைத்த விதை*
*ஆகாசமாய்ச் செழித்தடி*
*குட்டி என் செல்லம்*

*2.*
*திரியில் விதைத்த விதை*
*சுடராகச் செழித்ததடி*
*எதிலே விதைத்த விதை*
*காற்றாகச் செழித்ததடி*
*என் புஜ்ஜி பொம்மு?*

*3.*
*என்னை விடப்*
*பெரியவளாக இருக்கிறாள்*
*என் பொம்மு*
*எங்கள் இருவருக்கும்*
*பாட்டியாக இருக்கிறது*
*அவளின் பொம்மை*

*4.*
*என் விரலைப்*
*பிடித்துக்கொண்டு*
*பொம்மு நடப்பதாகச்*
*சொல்கிறாய்*
*பொம்முவின் உலகைப் பிடித்துக்கொண்டுதான்*
*நான் நடக்கிறேன்*

5.
குட்டி நாயின்
மூக்கை உரசும்
பிஞ்சுப் பூனையாக
எப்போதும் இருக்கிறாள்
என் பொம்மு

6.
அப்பாவை அம்மா என்றும்
அம்மாவை அப்பா என்றும்
சொல்லும் பொம்மு
கச்சிதமாக அம்மாவிடம்தான்
போகிறாள் பால் குடிக்க

7.
ஒரு புல்லிலிருந்து
பனி எடுத்து
இன்னொரு புல்லுக்குப்
பொட்டு வைக்கிறாள் பொம்மு

8.
‘அப்பா
இருட்டு ஆடுது பாரு’
என்கிறாள்
இரவில் அசையும்
மரத்தைப் பார்த்து

9.
வானம் வைக்க மறந்த
நட்சத்திரங்களை
தன சிலேட்டில் மலர்த்தி
விரலிலும் வளர்த்துக்கொண்டு
உறங்கிவிடுகிறாள் எப்போதும்
பொம்மு

*10.*

மழையை விடச் சின்னது
என்னது என்கிறாள் பொம்மு
என்னது என்று நானும் கேட்கிறேன்
மழையை விடச் சின்னது
மழைக்குள் இருக்கும் காற்று என்கிறாள்

*11.*

ஒரு நாள்
'மழை மேல மழை பட்டு
மழை வழுக்குது பாரு'
என்கிறாள்
இன்னொரு நாள்
'மழைக்குள் மழை
தூங்குது பாரு'
என்கிறாள்
வேறொரு நாள்
'இந்த மழை மாத்திரம் ஏன்ம்பா
குண்டா இருக்கு'
என்று கேட்கிறாள் பொம்மு

*12*

பொம்முவோடு
விளையாடும் நாய்
தான் அஃறிணை என்பதை
மறந்துதான் விடுகிறது
அப்படித்தான் பொம்முவும்
தான் கடவுள் என்பதை
மறந்துவிடுகிறாள்

*13.*

புல் என்பது
பனியின் வேர்
என்கிறாள் பொம்மு

*14.*

பொம்முவை
பொம்முவாக
விட்டால்தான்
பொம்முவாக இருக்கிறாள்

*15.*

பொம்முவால் மட்டுமே
முடியும்
தன் மூச்சாவிலிருந்து
தனக்கே தனக்கான
ரயிலை ஓட்டிப் போக

*16.*

காற்று வந்து
பெருக்குவதற்குள்
வீட்டைப் பெருக்கிவிட்டுப்
போய்விடுகிறாள் பொம்மு

வெயில் வந்து உலர்த்துவதற்குள்
வெளியை உலர்த்திவிட்டுப் போகிறாள்

மழை வந்து
நனைப்பதற்குள்
தெளித்துவிட்டுப் போகிறாள்
வாசலை

நான் பெற்றெடுப்பதற்குள்
பிறந்தும்விடுகிறாள்
பொம்மு

## ***தலைவன் கூற்று***

*திதலை அல்குல் நின்*
*மாமைக் கவினைப்*
*பசலை தின்னட்டும்*
*மின்சாரம் அறுபடும் மதியத்தில்*
*வேர்க்க வேர்க்க நிகழும்*
*முயங்கலின் மேன்மையினை*
*உனக்குணர்த்த*
*முயன்றுகொண்டே இருக்கிறேன்*
*அசுர வெயிலின்*
*பேரலை சீறும் தனிமைப் போதில்*
*வானம் பார்த்தபடி*
*முயங்கியதுண்டா நீ?*

*அறுந்து தொங்கும்*
*கள்ளியின் ஒழுகும் பால்*
*எனது காமம்*
*அப்போது போட்ட*
*ஆட்டுப் புழுக்கைச் சூடு*
*உனது காமம்*

## கிராபைட் வெளி

எண்பது பக்க நோட்டில்
ஆளுக்குப் பாதிப் பாதிப் பக்கங்கள்
என்று தீர்மானித்துக்கொண்டோம்
நீயொரு கத்தரிக்காயைப்
பூசணிக்காய் அளவு வரைந்தாய்
நான் தக்காளிக்கு மஞ்சள் நிறம் தீட்டி
உருளைக்கிழங்கு ஆக்கினேன்
நீயொரு பென்சில் வரைந்து
'என் ரப்பர் பென்சிலையே அழிக்கும்'
என்று அழித்தாய்
நான் வரஸ்ரீ டீச்சரை வரைந்து
பிரம்பால் அடித்தேன்
நீ உன் பங்குக்கு டீச்சரை
முட்டிபோட வைத்தாய்
நானொரு பறவை வரைந்து
பறக்க விட்டேன்
நீ வானம் வரைந்து வேலி
கட்டிக்கொண்டாய்
நான் அம்மாவை வரைந்து
கோள்மூட்டினேன்
நீ அம்மாவின் மடியில் விசும்பித்
தூங்கும் உன்னை வரைந்தாய்
நான் எண்பது பக்க நோட்டை வரைந்து
நம் இருவரின் பெயரையும் எழுதி வைத்தேன்
நீ பழம் விட்டாய் நானும் விட்டேன்

காற்று
இரவாக மாறிய கணம்
நாயொன்று நாவால்
ஒரு சுழற்று சுழற்றிவிட்டு
மீண்டும் படுத்துக்கொண்டது

அவன் சொல்கிறான்
அது காற்றை நக்கியது
இவன் சொல்கிறான்
இரவை நக்கியது
உவன் சொல்கிறான்
வெளியை நக்கியது
நான் சொல்கிறேன்
அது கணத்தை நக்கியது